IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

MCOP.NO. - 164/2019

P.W.1 - கலைவாணி க/பெ. வாசு

DATE - 24.04.2024

ம .சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு 4 ஆவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த விபத்தில் யார் இறந்ததற்காக இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் இறந்ததற்காக தாக்கல் செய்துள்ளேன். விபத்திற்கு லாரி ஒட்டுனரின் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் புல்லட் ஒட்டி சென்ற ராஜ் குமார் என்பவர் தீடிரென பிரேக் போட்டதால் தான் என் கணவர் கீழே விழுந்ததால் எதிரில் வந்த லாரி அவர் மீது ஏறியது. என்னுடைய மனுவில் விபத்தானது லாரி ஒட்டுனரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் இறக்கும் போது என் வேலை செய்து வந்தார் என்றால் கூலி வேலை செய்து வந்தார். என் கணவர் இரு சக்கர வாகனத்தில் முறையாக அமர்ந்து சென்று இருந்தால் இந்த விபத்து ஏற்பட்டு இருக்காது என்றாலும் அவர் என் வித பிடிப்பும் இல்லாமல் இரு சக்கர வாகனத்தில் அமர்ந்து சென்றதால் அவரின் அஜாக்கிரதையால் தான் கீழே விழுந்து லாரி அவர் மீது ஏறியது என்றாலும் அதனால் இரு சக்கர வாகனத்தின் ஒட்டுனர் மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல. அதனால் 4 ஆவது எதிர்மனுதாரர் எங்களுக்கு எந்த வித நஷ்டயீடும் வழங்க கடமைபட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. என் கணவர் சென்ற இரு சக்கர வாகனத்தின்

பதிவு எண் தெரியுமா என்றால் தெரியும் டி.என்.23 சி.ஜே.4307 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற நபர் மீது எந்த தவறும் இருந்ததாக சொல்லவில்லை என்றால் லாரி ஓட்டுனரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளளேன் என்றாலும் இரண்டு பேர் மீதும் தவறு. அதனால் 4 ஆம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY